நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**DVC. No. 8/2024**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேவி |
| தந்தை / கணவர் பெயர் | : | முனி |
| கிராமம் | : | காந்திநகர்(கொளத்தூர்) |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 02–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிர் மனுதாரர் ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 05.45PM)

1. நான் கல்குவாரியில் வேலை செய்து வருகிறேன். ஆட்கள் வைத்து காண்டிராக்ட் முறையில் தொழில் செய்து வருகிறேன். மாதம் எவ்வளவு

வருமானம் வரும் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது. ஒரு மாதம் ரூ.1 இலட்சம் வரலாம், ரூ.50,000/- வரலாம், ரூ.2 இலட்சம் கூட வரலாம். எனக்கு நிலையான வருமானம் கிடையாது.

2. மனுதாரர் வெண்ணிலா எனது மகள். எனது மகளுக்கும், எதிர் மனுதாரருக்கும் 7 வருடம் முன்பாக திருமணம் நடந்தது. எனது மகள் B.E. முடித்துவிட்டு M.E. 1 வருடம் படித்தார். அந்த சமயத்தில் நான் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்துக்கொடுத்தேன். மீதமுள்ள படிப்பை திருமணத்திற்கு பிறகுதான் படித்தார் என்றால் சரிதான். M.E. படிப்புக்கு கட்டணம் நான் தான் கட்டினேன். திருமணத்திற்கு பிறகும் நான் தான் கட்டினேன்.

3. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் அதற்காக செலவை செய்தார் என்றாலும் சரியல்ல. என் மகளை நான் தான் படிக்க வைத்தேன். நான் திருமணத்திற்கு 10 பவுன் தங்கநகை கொடுத்தேன். வீட்டு உபயோக பொருட்கள் ரூ.1,50,000/- ற்கு வாங்கிக்கொடுத்தேன்.

4. நான் தாக்கல் செய்த பிரமாணபத்திரிக்கையில் நான் படித்துபார்த்து தான் தாக்கல் செய்தேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது மகளை எதிர்மனுதாரர் அடித்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மகள் எனக்கு போன் செய்து சொன்னதால் எனக்கு தெரியும்.

5. வளைகாப்பு சேலத்தில் எதிர்மனுதாரர் வீட்டுப்பக்கத்திலுள்ள ஒரு ஆசிரமத்தில் வைத்திருந்தோம். அது பூ மார்க்கெட் பக்கத்தில் உள்ளது. அதன் பெயர் எனக்கு தெரியாது. அந்த ஆசிரமத்திற்கு வாடகை பணம் எதுவும் கொடுக்க தேவையில்லை. வீட்டிலிருந்து உணவை தயார் செய்துக்கொண்டு ஆசிரமத்திற்கு கொண்டுசென்று வளைகாப்பு வைத்தோம்.

6. வீட்டிலிருந்து எனது உறவினர்களுடன் உணவு தயார் செய்துக்கொண்டு எதிர்மனுதாரர் வீட்டுக்கு வளைகாப்பு செய்ய சென்றிருந்தபோது அவர்கள் 10 பவுன் மற்றும் ரூ.5 இலட்சம் பணம் கொடுத்தால் தான் வீட்டில் வைத்து வளைகாப்பு செய்ய முடியும் என்று தெரிவித்ததால் அருகில் இருந்த

ஆசிரமத்தில் முன் ஏற்பாடுகள் இன்றி வைத்து வளைகாப்பு செய்து எனது மகளை எனது வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டேன்.

7. நான் வீடு கட்டுவதற்கு எதிர்மனுதாரர் ரூபாய் 75,000/- பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ரூ.1 இலட்சம் ரூபாய் சீட்டு போட்டதில் நான் அந்த பணத்தை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவர் சீட்டு போடவும் இல்லை. நான் பணம் எடுக்கவும் இல்லை.

8. நான் தீபாவளிக்கு நான் நகைகள் எதுவும் சீர்வரிசையாக கொடுக்கவில்லை. ஆடி அழைப்புக்கு 1 பவுன் பிரேஸ்லெட் எதிர்மனுதாரருக்கு கொடுத்தேன். நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் தீபாவளிக்கு 1 பவுன் பிரேஸ்லெட் போட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆடிக்கு போட்டேனா, தீபாவளிக்கு போட்டேனா என்று எனக்கு சரியாக நியாபகம் இல்லை.

9. நான் சொல்வது தவறு என்றாலும், வளைகாப்பு நடத்தியது எதிர்மனுதாரர்தான் என்றாலும், அதற்கான செலவுகளை எதிர்மனுதாரர்தான் செய்தார் என்றாலும் சரியல்ல. எனது மகளுக்கு நான் செய்ய வேண்டியதை நான் தான் செய்தேன். திருமணத்திற்கு பிறகு கல்லூரியில் படிக்கவைத்ததும், பயிற்சி நிலையத்தில் படிக்க வைத்ததும், சென்னையில் நேர்முகத்தேர்வுக்கு அனுப்பி வைத்ததும் எதிர்மனுதாரர் என்றால் சரியல்ல.

10. எனது மகள் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(06.00 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/- நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**